பக்கங்கள் 20+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 22 புதன்கிழமை 11.12.2024 | அதிர்வு 132

## புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு



2024ஆம் ஆண்டுக் கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை மீள நடத்துமாறு கோரி 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தமது சகல பிரச்சினைகளுக்கும் இந்த அரசு தீர்வு காணும் என்று வடக்கு மக்கள் அதீத நம்பிக்கை

## பிரிட்டன் பிரதிநிதியிடம் ஆளுநர் தெரிவிப்பு

“இந்த அரசின் காலத்தில் தமது பிரச் சினைகள் அனைத்தும் தீர்க்கப்படும் என வடக்கு மாகாண மக்கள் நம்பிக்கை வைத் துள்ளனர்.”

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பிரிட்டன் தூதரகத்தின் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகளுக்கான முதனிலைச் செயலர் ஹென்றி டொனைட்டிடம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற சந்திப்பின்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப் பட்டமைக்கு முதலில் வாழ்த்துக்களைத் தெரிவித்த முதனிலைச் செயலர், வடக்கு மாகா ணத்தின்தற்போதையநிலைமைகள்தொடர்பில் அறிவது தனது பயணத்தின் நோக்கம் எனக் குறிப்பிட்டார். 02



## வவுனியாவில் யானை தாக்கி முன்னாள் கிராம சேவகர் பலி

(கி.வசந்தன்)


வவுனியா, வேலங்குளம் பகுதியில் யானை தாக்கி முன்னாள் கிராம சேவை யாளர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, வேலங்குளம் பகுதியில் வசிக்கும் முன்னாள் கிராம சேவகரான மேற்படி நபர் நேற்று மாலை தனது மாட்டை வீடு நோக்கிக் கொண்டு சென்ற போது வேலங்குளம் இராணுவ முகா முக்கு அண்மையில் வீதிக்கு வந்த யானை தாக்கியதில் அவர் சம்பவ



இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் முன்னாள் கிராம அலுவலரான மோகனகாந்தி 04



## நாடு முழுவதும் பொழியும் மழை

### இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் மீண்டும் திறக்கப்படும் நிலையில்

(ந.லோகதயாளன்)

சீரற்ற காலநிலையால் நாட் டில் மீண்டும் மழை பொழிகின்றது. குளங்களில் நீர் மட்டம் உயர்வடைந் துள்ளது. 04

# அர்ச்சுனாவின் சேட்டைகளுக்கு இடமில்லை! இனி வந்தால் பொலிஸில்தான் இருப்பார்!!

## யாழ். போதானா வைத்தியசாலையின் பணிப்பாளர் கடும் எச்சரிக்கை




"நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மீண்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் குழப்பம் விளைவிக்க வருவாரெனின், வாசலிலேயே வைத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார்."

– இவ்வாறு யாழ். போதானா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, தான் தற்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றும், தன்னை சேர் என்று அழைக்குமாறும் கூறி எம்மோடு முரண்பட்டார்.

அவரைச் சேர் என்று அழைக்க முடியாது என்று பதிலளித்தமைக்கு என்னை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவியில் இருந்து அகற்றுவேன் எனவும், நாடாளுமன்றத்துக்கு அழைத்து கேள்வி கேட்பேன் என்றும் அவர் கூறினார். அத்துடன் என்னை வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்லுமாறும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் உள்நுழைந்து நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குழப்பம் விளைவிப்பதற்கு இடமளிக்க முடியாது.

மீண்டும் ஒருமுறை அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் குழப்பம் விளைவிக்க முற்படுவாராயின் வாசலிலேயே வைத்து தடுத்து நிறுத்தப்பட்டு, பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார்." – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

தமது சகல...

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து இன்னமும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், குறிப்பாக மக்களின் காணிகள் கடந்த காலங்களில் அவர்கள் இடம்பெயர்ந்திருந்த சந்தர்ப்பங்களில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் தமது ஆளுகைக்கு உட்பட்டதாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டமையால் தற்போது சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளது என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.



விவசாயிகளின் வாழ்வாதாரம் இதனால் கடுமையான பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது என்று குறிப்பிட்ட ஆளுநர், வடக்கு மாகாண மக்களின் முக்கியமான பிரச்சினையாக இது உள்ளது எனவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட சில வீட்டுத் திட்டங்கள் இடைநடுவில் இருப்பதால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனவும், அவை விரைவில் பூர்த்தியாக்கப்பட வேண்டிய தேவை உள்ளது எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வலிகாமம் வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் நீண்ட காலம் இருந்த வீதி மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டமை சிறந்த நடவடிக்கை எனக் குறிப்பிட்ட ஆளுநர், மக்கள் மேலும் வீதிகளை, காணிகளை விடுவிக்கக் கோருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் பாதுகாப்புத் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்டிருந்த சோதனைச் சாவடிகள்மற்றும்வீதித்தடைகள்என்பனஅகற்றப்பட்டுள்ளன என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசின் காலத்தில் முதலீட்டாளர்களுக்குநம்பிக்கைஏற்பட்டுள்ளமையால் அதிகளவில் வருகின்றனர் எனக் குறிப்பிட்ட ஆளுநர், அடுத்த ஆண்டு முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையிலும் இளையோருக்கான வேலைவாய்ப்புக்களை வழங்கும் நோக்கிலும் பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கப்படவுள்ளது எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும், பொதிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் விரைவில் அதற்கும் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் தமிழகத்தில் அண்ணளவாக ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக உள்ளனர் எனவும், அவர்கள் நாடு திரும்பினால் அவர்களுக்குரிய வாழ்வாதார, வதிவிட உதவிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தின் பிரதான வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டபோதும் உள்ளக வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்று குறிப்பிட்ட ஆளுநர், அவற்றை எதிர்காலத்தில் விரைந்து அபிவிருத்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும், தற்போதைய அரசின் காலத்திலேயே அபிவிருத்திகளைச் செய்து முடிக்கலாம் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, ஐ.நா. முகவர் அமைப்புக்கள் ஊடாக பிரிட்டன் அரசு கடந்த காலங்களில் வடக்கு மக்களுக்கு மேற்கொண்ட உதவிகளுக்கு ஆளுநர் நன்றிகளையும் தெரிவித்தார்.

# பிரிட்டன் முதனிலைச் செயலர் யாழ். அரச அதிபருடன் சந்திப்பு





பிரிட்டன் தூதரகத்தின் சமாதானத் தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகளுக்கான முதனிலைச் செயலர் ஹென்றி டொனைட், இன்று காலை யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபனை அரச அதிபர் அலுவலகத் தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை பிரதேச மற்றும் ஆதார வைத்திய சாலைகளுக்குத் தேவையான வைத்திய உபகரணங்களின் தேவைப்பாடுகள் உள்ளன எனவும், அதற்கான உதவி களை வழங்குமாறும் அரச அதிபர் கோரிக்கை முன்வைத்தார்.

மேலும், இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த் தம் தொடர்பாகவும், அதற்காக எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் முதனிலைச் செயலாளர் வினாவிய போது, யாழ்ப்பாணம் மாவட்டத்- தில் ஒரு வார காலங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் போல் எதிர்காலத் தில் ஏற்படா வண்ணமிருக்க சீரான வடிகாலமைப்பு முறைகளின் அவசியம் பற்றி தெரிவித்த அரச அதிபர், வெள்ள அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்காக அரசால் இது வரை ரூபா.50 மில்லியன் நிதி விடுவிக் கப்பட்டது எனவும், இதில் சமைத்த உணவு வழங்கல் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் விநியோகம் என்பவற்றுக் காக ரூபா 49 மில்லியன் பயன்படுத் தப்பட்டு வருகின்றது எனவும், ரூபா 1 மில்லியன் உடனடி அனர்த்தத் தணிப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது எனவும் தெரிவித்ததுடன், எமது அரசிடம் மாவட்டத்துக்கான தேவைப்பாடுகளை முன்வைத்தபோது, நாம் கோரிய நிதி ஒதுக்கீட்டைச் சம்பந்தப்பட்ட அமைச்சு விரைவாக விடுவித்தமையானது மகிழ்ச்சியான விடயம் எனவும் அரச அதிபரால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மீள்குடியேற்ற நிலவரங்கள், அஸ் வெசுமத் திட்டத்தில் பயனாளிகள் தெரிவு முறைமை, வீட்டுத் திட்டங்கள் போன்றவற்றின் விபரங்களை அரச அதிபரிடம் முதனிலைச் செயலாளர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது, யாழ்ப்பாணம் மாவட் டத்துக்கான வீடமைப்புத் திட்டத்தின் தேவைப்பாடுகளையும் அரச அதிபர் குறிப்பிட்டதுடன் மேலும், மீள்குடியேற்ற வேலைத்திட்டங்கள் முன்னேற்றகரமாக நடைபெற்று வருவதாகவும், நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த காணி யற்ற குடும்பங்களுக்குக் காணி அரசின் நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டு வீடமைப்புத் திட்டமும் வழங்கப்பட்ட தாகவும் குறிப்பிட்டதுடன், ஒரு நலன் புரி நிலையத்தில் மாத்திரம் இரண்டு குடும்பங்களே தங்கியிருக்கின்றன எனவும், அவர்களுக்கும் காணிக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பா- டுகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், இம் மாத இறுதிக் குள் ஒரேயொரு நலன்புரி நிலையமும் மூடப்படவுள்ளது எனவும் அரச அதிப ரால் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பிரிட்டன் தூதரகத்தின் அலுவலர் செல்வி ப்ராக் வேர்துஸூம் உடனிருந்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**நாடு முழுவதும்...**

இதனால் கிளிநொச்சி மாவட்டத் தின் இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் மீண்டும் திறக்கப்படவுள்ளன என்று அதன் பொறியியலாளர் கருணா நிதி தெரிவித்தார்.

இரணைமடுக்குளமானது அதன் மொத்தக் கொள்ளளவான 36 அடியில் 35 அடி நீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. தற்போது பொழியும் மழை வீழ்ச்சியின் காரணமாக 35 அடி 4 அங்குலத்தை எட்டியுள்ளது.

மழை தொடர்வதற்கான காலநிலை தொடர்வதனால் இன்று இரவு அல்லது நாளை காலை குளத்தின் வான் கதவுகள் திறக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

**வவுனியாவில்...**

என்பவரே மரணமடைந்தவராவார்.

குறித்த யானை சுமார் மூன்று மணி நேரத்துக்கு மேலாக அந்தப் பகுதியில் நின்று அட்டகாசம் புரிந்துள்ளது.

இதனால் அந்த வீதி வழியாக மக் கள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற் பட்டது.

சம்பவம் தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

**புலமைப்பரிசில்...**

பெற்றோர்கள் சிலரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசார ணையை எதிர்வரும் 16ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு உயர்நீதிமன்றம் இன்று புதன்கிழமை உத்தரவு பிறப்பித் துள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் மூன்று வினாக் கள் கசியப்பட்ட சம்பவத்தையடுத்து பரீட்சையை மீள நடத்துமாறு கோரி பெற்றோர்கள் சிலர் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில், இந்த மனு எஸ். துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதிமன்றில் முன்வைக் கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்த நீதி யரசர்கள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

# வடக்கை அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்ற வேண்டும்

## பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி மாத நிகழ்வில் ஆளுநர் உரை








“வடக்கு மாகாணத்தை அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்ற வேண்டும். அதற்கு முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் எமது உள்ளூராட்சி மன்றங்களும் மாற்றமடைய வேண்டும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மாத நிகழ்வும், வாசிப்பு மாத நிகழ்வும் பண்பாட்டுப் பெருவிழாவும் பருத்தித்துறை எஸ்.எஸ். மண்டபத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழர்களுக்கு என்று தனிச் சிறப்பான பண்பாடுகள் இருக்கின்றன. அவை இன்று அருகி வருகின்றன. அவற்றைக் கட்டிக்காப்பதற்காகவே இவ்வாறான பண்பாட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன. அவை வரவேற்றப்படவேண்டும். ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன் ஊடாக எமது பண்பாடுகள் காக்கப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

குறிப்பாக வரவேற்பு, விருந்தோம்பல், நன்றி கூறல் என்பன எமது பண்பாட்டின் அடிப்படைகள். அவற்றை விட்டு நாம் இன்று வெகுதூரம் சென்றுவிட்டோமா என்ற அச்சம் ஏற்படுகின்றது.

அரச திணைக்களங்களை நாடி சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பொதுமக்கள் சென்றால், சில திணைக்களங்களில் அவர்களை வரவேற்பதற்கு யாருமில்லை. அது தவறானது.

பொதுமக்களை நாடிச் சென்று நாம் சேவை செய்யவேண்டும். விரைவான, தரமான, அன்பான சேவையே மக்கள் சேவை. அதைச் செய்வதற்கு ஒவ்வொரு திணைக்களங்களும் முன்வரவேண்டும்.

எமது மாகாணத்தின் இளையோர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான வேலைவாய்ப்புக்களை நாம் எமது மாகாணத்தில் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதற்கு முதலீடுகளை இங்கு ஊக்குவிக்க வேண்டும்.

நான் யாழ். மாவட்ட செயலராகப் பணியாற்றிய காலத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்குச் சிலர் வந்தார்கள். ஆனால் அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டார்கள். அவர்களிடம் கேட்டபோது, முதலீடுகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் கையூட்டு எதிர்பார்க்கின்றார்கள் என்று சொன்னார்கள். அது அன்றைய நிலைமை. ஆனால், தற்போதைய அரசு அவற்றுக்கு முற்றிலும் எதிரானது. பல முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்கு விரும்புகின்றார்கள். அவர்களை நாங்கள் வரவேற்கவேண்டும்.

எமது உள்ளூராட்சி மன்றங்கள் முதலீட்டாளர்களுக்கு உதவும் வகையில் செயற்பட வேண்டும். அவர்களை அலைக்கழிக்கக்கூடாது. எமது மாகாணத்தைநாம்அபிவிருத்தியடைந்தமாகாணமாக மாற்றும் இலக்கை நோக்கிப் பயணிக்க அனைவரும் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும்.” – என்றார்.

இந்த நிகழ்வில் பிரதேச கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், வாசிப்பு மாத போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச சபையின் செயலர் அ.வினோராஜ், வடக்கு மாகாண ஆளுநரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன் நினைவுச் சின்னமும் வழங்கினார். மேலும், பருத்தித்துறை பிரதேச சபையின் நிகழ்நிலை மூலமான கட்டணங்களைச் செலுத்தும் திட்டமும் ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.





# காரைதீவு பிரதான வீதியில் ஆறடி அடையாள தூண்கள்!

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு – அம்பாறை பிரதான வீதியில் அண்மையில் பெரு வெள்ளம் ஏற்பட்ட பாதையின் இருமருங்கிலும் ஆறடி உயர அடையாள தூண்கள் நிர்மாணிக்கப் பட்டுள்ளன.

காரைதீவு பிரதான வீதியில் அண்மையில் பெரு வெள்ள அனர்த்தம் இடம்பெற்று மதரஸா மாணவர்கள் உள்ளிட்ட பலர் உயிரிழந்த சம்பவத்தின் எதிரொலியாக இத் தூண்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்துக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உட்பட ஏனைய தரப்பினரும் ஒத்துழைப்புகளை வழங்கினர்.

எதிர்காலத்தில் இந்தப் பகுதியில் ஏற்படும் வெள்ள நிலையின் அளவீட்டை இலகுவாகக் கணீப்பீடு செய்வதற்காகவும் அவ்வழியாக பயணம் செய்யும் பொது மக்கள் வாகனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் இந்தத் தூண்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அடாவடிக் கருத்து

நாடு முழுவதும் இதுவரையில் ஆட்சியிலிருந்த தரப்புகளுக்கு எதிரான கசப்புணர்வு பீறிட்டு ஜே.வி.பி. ஆதரவாக வெளிப்பட்டபோது, அந்த அலையில் அள்ளுப்பட்டு, ஜே.வி.பியுடன் ஒட்டிக் கொண்டிருந்த புண்ணியத்தில் நாடாளுமன்றத்துக்குள் புகுந்த தமிழ் 'அநாமேதயங்கள்' எல்லாம் தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தை கொச்சைப்படுத்தும் விதத்தில் விமரிசித்து கருத்து வெளியிடும் அவல நிலைமை இப்போது வந்திருக்கின்றது.

தமிழர் தாயகத்தில் ஜே.வி.பி. உள்ளிட்ட தேசிய மக்கள் சக்திக்கு விளைவுகளைப் புரியாமல் விழுந்தடித்து வாக்களித்த தமிழர்களும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் இந்த அவல நிலைமை ஏற்படக் காரணம் என்பதை மறந்து அல்லது மறுத்து விட முடியாது.

இவ்விடயத்தில் ஆளும் தரப்பில் பதுளை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான உறுப்பினர் செல்வராஜ் தமிழரின் உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திக் கூறிய 'மிக மோசமான' கருத்துக்கு வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ரெலோ பிரமுகரான சபா குகதாஸ் சரியான பதிலடி கொடுத்திருக்கின்றார்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், வடக்கு - கிழக்கு இணைப்பு தமிழ் பேரினவாதத்தின் சிந்தனை எனவும், இணைந்த வடகிழக்கு உள்ளடங்கிய தனிநாட்டு கோரிக்கையை தான் நிராகரிக்கின்றார் எனவும் தெரிவித்துள்ளார்.

பல்லாயிரம் தமிழ்ப் போராளிகள் மற்றும் தமிழ்ப் பொதுமக்களின் ஈகத்தில் முன்னெடுக்கப்படும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அவலப்படுத்தும் விதத்திலான இத்தகைய 'அடாவடித்தனமான' கருத்து வெளிப்பாடு ஒரு தமிழரிடமிருந்து வெளிப்படுவது - அதுவும் மலையகப் பகுதி சகோதரரிடமிருந்து வருவது - இந்தத் தேசத்தில் சிறுபான்மையினரான ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் பின்னடைவான ஒரு நிலைமையாகும்.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், அவரைத் தெரிவு செய்த மாவட்டத்தில் மக்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்ற போது அவற்றை கருத்தில் கொள்ளாது வடக்கு - கிழக்கு ஈழத் தமிழரின் வாழ்விட வரலாறு தெரியாமல் ஆளும் கட்சிக்கு சாமரை வீசுவதற்காக முந்திரிக் கொட்டை போல பிதற்றியுள்ளார் என உண்மையை எடுத்துரைத்துள்ளார் சபா குகதாஸ்.

"செல்வராஜ் எம்.பி. முடிந்தால் நீங்கள் பெருந் தோட்ட தொழிலாளரின் இரண்டாயிரம் ரூபா சம்பளத்தை பெற்றுக் கொடுங்கள். எதிரணியில் இருக்கும் போது நீங்கள் சார்ந்த அணியினர் மிக உருக்கமாக பெருந் தோட்ட தொழிலாளர் சம்பள விவகாரத்தில் போராடினார்கள். இச் சந்தர்ப்பத்தில் அதனை நிறைவேற்றி, வாக்களித்த உங்கள் மக்களுக்கு உதவுங்கள்.

"இலங்கைத்தீவில் மூன்று இராசதானிகள் இருந்த போது வடக்கு - கிழக்கு இணைந்த பிரதேசம் தமிழர் இராச்சியமாக இருந்த வரலாறு தொடங்கி, இலங்கை - இந்திய ஒப்பந்தம் வரை வரலாற்றைப் படியுங்கள்.

"இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களை நீதிமன்றம் சென்று பிரித்த ஜே.வி.பியின் சிங்கள பேரினவாதத்தை மறைக்க இதுவரை எந்த சிங்கள ஆட்சியாளனும் கையாளாத 'தமிழ் பேரினவாதம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி துதி பாடுவதை நிறுத்துங்கள் செல்வராஜ் எம்.பி.

"உங்களுக்கு முந்திய உங்கள் தலைமுறையை நாடற்றவர்களாக பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு சிங்களப் பேரினவாதம் வெளியேற்ற முற்பட்ட போது மிக கடுமையாக போராடியவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் தமிழ்த் தலைவர்களும் மக்களும் என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்திக் கொள்கிறோம்." - என்று தெரிவித்திருக்கின்றார் சபா குகதாஸ்.

பதவிகளுக்காக எஜமானர்களுக்கு சாமரம் வீசும் அற்பர்களுக்கு இனமானத்துக்கான போராட்டத்தின் ஆழமான அர்த்த பரிமாணங்கள் புரியப் போவதில்லை.



# மட்டக்களப்பில் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி இன்று

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி இன்று புதன்கிழமை மட்டக்களப்பு கிரானில் நடைபெற்றுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டுவதன் மூலம் சூழல் பற்றிய விழிப் புணர்வை ஏற்படுத்தி, அவர்களைச் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் நோக்குடனும் மாணவர் களின் பன்முக ஆளுமைத் திறனை மேம்படுத்தும் நோக்குடனும் பசுமை அறிவொளி என்றும் நிகழ்ச்சித் திட்ட மொன்றை முன்னெடுத்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே மட்டக்களப்பு




கிரானில் வெஸ்லி மண்டபத்தில் இந் நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் இ. சூரியகுமார் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்ச்சியில் பசுமை இயக் கத்தின் சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த.யுகேஸ் கலந்து கொண்டு சூழல்விழிப்புணர் உரை யாற்றியிருந்தார். இதில் கிரான், முறக் கொட்டாஞ்சேனை, பாலயடித்தோணா, கோரகல்லிமடு பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்றிருந்தார்கள். கலந்துகொண்ட மாணவர்கள் அனைவருக்கும் அப்பியா சக் கொப்பிகள் வழங்கப்பட்டன. இதற் கான நிதி அனுசரணையை மாணவர் களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கு டன் கனடா ரொறன்ரோவின் மனித நேயக்குரல் அமைப்பு வழங்கியிருந் தமை குறிப்பிடத்தக்கது.


















Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

# சிவனொளிபாத மலை பருவகாலம் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பம்

**(மஸ்கெலியா)**

சிவனொளிபாத மலை பருவகாலம் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாக உள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி இரத்தினபுரி கல்பொத்தாவில ரஜமஹா விகாரையில் இருந்து நான்கு வழியாக சிவனொளிபாத மலைக்குச் சுவாமிகள், ஆபரணங்கள் மற்றும் பூஜைப் பொருள்கள் கொண்டு வர ஏற்பாடு நடைபெற்று வருகிறது என்று சிவனொளிபாத மலைக்குப் பொறுப்பான ஊவா வெரலஸ்ஸ பல கலைக் கழகத்தின் பீடாதிபதி தேரர் பெங்கமுவே தம்ம தின்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

14 ஆம் திகதி பௌர்ணமி நாளில் அதிகாலை முதல் பிரித் ஓதும் வைபவம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சிவனொளிபாத மலை பருவகாலம் ஆரம்பமாகி 2025 வைகாசி மாதம் வரும் வைகாசி விசாகம் தினத்தன்று நிறைவுக்கு வரும்.

தொடர்ந்து ஆறு மாதங்கள் இடம்பெறும் பருவத்தில் மலைக்குத் தரிசனம் செய்யச் செல்லும் யாத்திரிகர்கள் பொலித்தீன், பிளாஸ்டிக் போத்தல்கள், உக்காத பொருள்கள் கொண்டு செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. போதைப் பொருள் வர்த்தகம், சட்ட விரோதமாக முறையில் எவ்விதமான செயல்களையும் ஈடுபடக் கூடாது எனவும் 24 மணி நேரமும் பாதுகாப்பு அதிகாரிகள் சிவில் உடையில் கண்காணிப்பு மேற் கொண்டு வருவார்கள் எனவும் தெரிவித்தார்.

தற்போது இந்த பகுதியில் கன மழை காரணமாக நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து உள்ளதால் நீர் தேக்கங்களில் நீராட வேண்டாம் எனவும் நீராடுவதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே நீராடுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் முல்லையில் நடைபவனி

**(விஜயரத்தினம் சரவணன்)**

மீனவ சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதன் மூலம் கண்ணியமான வாழ்விற்கு எம்மை அர்ப்பணிப்போம், உணவு இறையாண்மையை உறுதிசெய்வோம் என்னும் தொனிப்பொருளில் முல்லைத்தீவில் நேற்று (10) தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபவனி ஒன்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு முன்பாக ஆரம்பித்த இந்த நடைபவனியானது, முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேசசபை கலாச்சார மண்டபம் வரை இடம்பெற்றது.

நடைபவனியில் ஈடுபட்டிருந்தவர்கள் இந்தியன் இழுவமடி ஆக்கிரமிப்பை நிறுத்துதல், மீனவசட்டத்தை உடன் அமுல்படுத்துதல், சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகளை முற்றாக தடைசெய்தல், கனியமணல் அகழ்வைக் கட்டுப்படுத்தல், சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பண்ணைவளர்ப்புத் திட்டங்களை நிறுத்துதல், காற்றாலை மின்சாரத் திட்டத்தைத் தடை செய்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து கோசங்களை எழுப்பியவாறும், பாதாதைகளைத் தாங்கியவாறு நடைபவனியில் ஈடுபட்டனர்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் 16 மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதகள், மீனவர்கள் என பலரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

தொடர்ந்து கரைதுறைப்பற்று பிரதேச சபைக் கலாச்சார மண்டபத்தில் உலக மீனவ தின நிகழ்வுகள் இடம்பெற்றன.









# கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்தார் யு.என்.எவ்.பி.ஏ. பிரதிநிதி குன்லே அதெனி

(ஹஸ்பர்)

திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான யு.என்.எவ்.பி.ஏ. பிரதிநிதி குன்லே அதெனி ஆகியொருக்கு இடையில் சந்திப்பொன்று நேற்று (10) மாலை இடம்பெற்றது.

கலந்துரையாடலின் போது, கிழக்கு மாகாணத்தில் உள்ள சமூகங்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க பல்வேறு பங்குதாரர்களுடன் யு.என்.எவ்.பி.ஏ. தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்கும் என்று அதேனி வலியுறுத்தினார்.

பெண்கள் மற்றும் சிறுமிகளின் ஆரோக்கியம், பாலின சமத்துவம் மற்றும் காலநிலை மீள்தன்மை போன்ற முக்கிய துறைகளில் கவனம் செலுத்துவதை அவர் முன்னிலைப்படுத்தினார். மேலும் இந்த முயற்சிகளில் ஆளுநரின் தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்க்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், கிழக்கு மாகாணத்தின் பல்கலாச்சாரத் தன்மையை அங்கீகரித்து, அதன் பன்முகத்தன்மையை பலமாகப் பார்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மாகாணத்தில் சமூக மற்றும் இன நல்லிணக்கத்தையும், பாலின சமத்துவத்தையும் சமத்துவத்தையும் மேம்படுத்துவதே தனது முதன்மையான கவனம் என்று அவர் கூறினார்.

குடும்ப வன்முறைகள் அதிகமாக இருப்பதையும் சுட்டிக்காட்டிய ஆளுநர், பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவர் முயற்சிகளுக்கு முழு ஆதரவையும் உறுதியளித்தார் மற்றும் இந்த சவால்களை எதிர்கொள்ள கூட்டு முயற்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

அதெனி, கலந்துரையாடலுக்கு நன்றி தெரிவித்ததோடு, ஆளுநரின் பதவிக் காலத்துக்குத் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார். ஆளுநரின் தலைமையில் கிழக்கு மாகாணம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.



# மலேசிய தூதுவர் - கிழக்கு ஆளுநர் சந்திப்பு

(ஹஸ்பர்)

இலங்கைக்கான மலேசியத் தூதுவர் பத்லி ஹிஷாம் ஆதம் நேற்று (10) திருகோணமலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அவர் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகரவைத் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் சந்தித்துள்ளார்.

இதன் போது கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.





# ஐ.ஓ.சி. நிறுவனத்தின் பணிப்பாளர் கிழக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

இந்திய எண்ணெய் நிறுவனத்தின் (ஐ.ஓ.சி) முகாமைத்துவப் பணிப்பாளர் தீபக்தாஸ் தலைமையிலான நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு நேற்று (10)கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவை, திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் சந்தித்தனர்.

மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் உள்கட்டுமான அபிவிருத்தி தொடர்பில் இரு தரப்புக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திக்கான விடயங்கள் இங்கு ஆராயப்பட்டன.

மாகாணத்தின் சுகாதாரப் பராமரிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. மாகாணத்தின் வைத்தியசாலைகளுக்கு தேவையான இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் மற்றும் சீ.ரி.ஸ்கான் இயந்திரங்கள் தேவையாக உள்ளமை பற்றி ஆளுநரால் இங்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் கொழும்புக்கான சிரேஷ்ட உதவித் தலைவர் அம்பர் அகமட்,பொறியியல் பிரிவுக்கான உதவித் தலைவர் சந்தீப் குப்தா, திருகோணமலைக்கான உதவித் தலைவர்களான பீ.கே.மண்டல் மற்றும் நவீன் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டிசெம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் சுற்றுலாப் பயணி வருகை அதிகரிப்பு



(க.கிஷாந்தன்)

இலங்கையில் டிசெம்பர் மாதத்தின் முதல் 4 நாள்களில் 23,958 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ரஷ்யாவில் இருந்தே அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதத்தில் ரஷ்யாவில் இருந்து 4,418 பேரும், இந்தியாவில் இருந்து 4,317 பேரும், பிரித்தானியாவில் இருந்து 1,592 பேரும் இலங்கைக்குச் வருகைதந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன. அந்த வகையில் நாட்டில் பல்வேறு பாகங்களில் இருந்தும் எல்ல பகுதிக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

அதிக சுற்றுலா பயணிகள் வருகை தருவதால் மாலை நேரங்களில் பிரதான வீதிகளில் வாகனங்கள் நகரவே முடியாத சூழல் காணப்படுகின்றது.

வருகைத் தந்துள்ள சுற்றுலாப் பயணிகள் பூங்கா, ராவணஎல்ல நீர் வீழ்ச்சி, நட்சத்திர ஹோட்டல்கள் என்பவற்றுக்கு அதிகம் செல்கின்றனர். இதனால் எல்லவில் வாடகை வாகன ஓட்டுநர்கள், சுற்றுலா வழிகாட்டிகள், ஹோட்டல் உரிமையாளர்கள், வர்த்தகர்கள், வணிகர்கள் ஆகியோர் மகிழ்ச்சியடைந்துள்ளனர் என்று தெரிவிக்கின்றனர்.

அதிக சுற்றுலா பயணிகள் சாகசங்கள் மற்றும் குதூகலம் நிறைந்த ஏராளமான விடயங்களை அனுபவித்து மகிழ்கிறார்கள். இந்த பகுதியில் 9 வளைவுகள் கொண்ட பாலம் சுற்றுலா பயணிகளை பெரிதும் கவரும் இடமாகக் காணப்படுகின்றது.


குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# கிழக்கு மாகாண நியமனங்களும் கடமையேற்பும்

(அபு அலா)

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலக செயலாளராக ஜே.எஸ்.அருள்ராஜ் நியமிக்கப்பட்டு அவருக்கான நியமனக் கடிதத்தை நேற்று முன்தினம் (09) கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் செயலாளராக எம்.எம்.நஸீர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, கடந்த 06 ஆம் திகதி மாகாண அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்களை நியமித்து அவர்களுக்கான கடிதங்களையும் வழங்கி வைத்தார்.



இதேவேளை கல்முனை பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த ஜே.லியாக்கத் அலி கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் கடமை பொறுப்பேற்றுக்கொண்டார்.




# இளையோர் உரிமையை வென்றெடுக்கும் விழிப்புணர்வு ஊர்வலங்கள் மன்னாரில்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை (10) மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) ஏற்பாட்டில் இளையோர்களை ஒன்றிணைத்து விழிப்புணர்வு ஊர்வலம் இடம் பெற்றது.

மன்னார் பஜார் பகுதியில் இருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமானது.

இளையோர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் குரல் கொடுக்கும் முகமாக ஊர்வலம் இடம் பெற்றது.

மன்னார் பஜார் பகுதியில் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மேற்கத் தேய இசை வாத்தியம் முன்னெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து விழிப்புணர்வு கவனவீர்ப்பு ஊர்வலம் இடம் பெற்றது.

மன்னார் பஜார் பகுதியில் இருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகி மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக சென்று மீண்டும் மன்னார் பஸ் நிலையத்தை வந்தடைந்தது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், இளைஞர், யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# போதைப்பொருளுடன் ஒருவர் பொகவந்தலாவையில் கைது!

(க.கிஷாந்தன்)

என்.சி. எனும் போதைப் பொருளை விற்பனை செய்துவந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவர் 3 கிலோ 500 கிராம் என்.சி. போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்பட்ட என்.சி. என்ற போதைப் பொருளை விற்பனை செய்த சந்தேகத்தின் பேரில் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் (09) கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சுகாதார அமைச்சால் தடைசெய்யப்பட்ட என்.சி. என்ற போதைப்பொருள் சிறிய பொதிகளில் பொதியிடப்பட்டு தோட்டங்களில் உள்ள இளைஞர்களுக்கு ஒரு பக்கட் 500 ரூபா முதல் 1000 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பொகவந்தலாவ பிரிட்வேல் தோட்டத்தில் வசிப்பவர் எனவும் சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்ட போது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் பொகவந்தலாவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

## ரவிகரன் எம்.பி. நேரில் விஜயம்

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று கல்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் கீழுள்ள ஆண்டான்குளம் மற்றும் தண்ணிமுறிப்பு ஆகிய பகுதிகளில் கால் நடை வளர்ப்பில் ஈடுபடும் கால்நடை வளர்ப்பாளர்கள் மேச்சல் தரவை இன்மையால் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் பகுதிகளுக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு அந்தப் பகுதி கால்நடை வளர்ப்பாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அந்தவகையில் குறித்த ஆண்டான்குளம் மற்றும் தண்ணிமுறிப்புப் பகுதிகளில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் காணப்படுகின்றன. இருந்த போதும் அந்தக் கால்நடைகளுக்கு உரிய மேச்சல் தரவையின்மையால் வருடந்தோறும் 50 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழக்கின்றன என்று கால் நடைவளர்ப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் பல கால் நடைவளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை விற்பனை செய்கின்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் கால் நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேச்சல் தரவை தொடர்பான கோரிக்கைகளை உரிய தரப்புக்களிடம் பலதடவை முன்வைத்தும், இதுவரையில் அதுதொடர்பில் உரிய நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்தோடு, இந்த ஆண்டான்குளம் மற்றும் தண்ணிமுறிப்பு பகுதிகளிலுள்ள கால்நடைகளில் இருந்து நாளொன்றிற்கு 3 ஆயிரம் லீற்றருக்கும் அதிகமான பால் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும் மேச்சல் தரவை கிடைக்கப்பெறின் இதனைவிட அதிக பாலுற்பத்தியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் விவசாயிகள், நடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் அனைவருக்குமே இந்த மேச்சல்தரவை இல்லாத பிரச்சினை இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு மேச்சல் தரவையில்லாத பிரச்சினையால் அதிக கால்நடைகள் உயிரிழப்பு ஏற்படுவதுடன், கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை விற்பனை செய்கின்ற இக்கட்டான நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். அத்தோடு பாலுற்பத்தியும் மந்த நிலையில் இருப்பதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாதிப்பு நிலையுணர்ந்து அவர்களின் அத்தியாவசியத் தேவையாகவுள்ள மேச்சல் தரவை வழங்கப்படவேண்டும். மேச்சல் தரவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.–என்றார்.



# சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷலுக்கு "சாஹித்ய மாகாண விருது" வழங்கல்





(மட்டு. துஷாரா)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நாடத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டு மாகாண இலக்கிய விழாவில் சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் சமூக விஞ்ஞானத்தில் (ஆயுள்வேதம்) "சாஹித்ய மாகாண விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி. திசாநாயக்க தலைமையில் இன்று (11) திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம், சான்றிதழ் மற்றும் காசோலை போன்றன வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.

பொது மக்களுக்கு நோய் பற்றிய தெளிவையும், அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெற்றுக்கொள்ளலாம் என்ற விழிப்புணர்வுகளை வழங்கும் நோக்கில், துறைசார் வைத்திய நிபுணர்கள் ஊடாக பெற்றுக்கொண்ட மருத்துவ ஆக்கங்களை "நலன் தரும் மருத்துவம்" என்றபெயரில், சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் தொகுத்து நூல் வெளியீடு செய்திருந்தார்.

அந்த நூல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்பட்டு சாஹித்ய மாகாண விருதை வழங்கி கௌரவித்தனர்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த விழாவுக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க ஆகியோருடன் கௌரவ அதிதிகளாக அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த விழாவில், கடந்த மூன்று வருடங்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கான விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# கேரளா கஞ்சாவுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணை

(பாறுக் ஷிஹான்)

கேரளா கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இன்று (11) அதிகாலை விசேட அதிரடிப்படையினரின் விசேட பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து மாறுவேடத்தில் சென்ற கல்முனை விசேட அதிரடிப்படையினர் துறைநீலாவணை பகுதியில் வைத்து அவர்களைக் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் ஒரு தொகை கேரளா கஞ்சா மீட்கப்பட்டது என்று அவர்கள் தெரிவித்தனர். அவர்களின் கைத்தொலைபேசி, மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட பொருள்



களும் மீட்கப்பட்டு களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

43 மற்றும் 39 வயதுடைய இரு சந்தேக நபர்களும் மத்தியமுகாம், கிளிநொச்சி பகுதியை சேர்ந்தவர்களாவர்.

கேரளா கஞ்சா கிளிநொச்சி பகுதியில் இருந்து பஸ் ஊடாகக் கடத்தப்பட்டு பின்னர் மோட்டார் சைக்கிள் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மாரி காலமும் யாழ். வீதியோர வியாபாரிகளும்!

சிலந்தி கூட தனது வாழ்வைத் தன் ஜாலத்தைப் பின்னித்தான் நடத்திக் கொள்கிறது என்பது போல யாழ். வியாபாரிகளும் தங்கள் முயற்சியால் தங்கள் குடும்பங்களை காப்பாற்றி விடுகின்றனர்.

இந்த யாழ்ப்பாணம் தன்னை இசையால் மட்டுமின்றி அதன் வணிக பரம்பரை பாரம்பரிய கலாச்சார அழகிய மரபுகளால் மக்கள் மனதில் முக்கிய இடம் பெற்றுள்ளது. இங்கு சிறு குறு வியாபாரிகள் தங்கள் வாழ்வாதாரத்துக்காகப் பொது மக்களுக்குப் பல சேவைகளையும் செய்து வருகின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வீதிகளில் இருந்து பல வியாபாரிகளின் பயணம் தொடங்குகின்றது. இவர்கள் நமது நகைச்சுவை கலவை போல திகழ்கின்றவர்களாகவும் விளங்கி வருகின்றன .

இந்த வியாபாரிகளின் நிலையை அறிய நாம் முதலில் அவர்களின் வாழ்வியல் நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் எளிமையான முறையில் மக்கள் தொகைக்குத் தேவையான பொருள்களை புறந் தோறும் விற்பனை செய்வதன் மூலம் அன்றாடம் வாழ்வாதாரத்தை உருவாக்குகின்றனர்.

அதாவது “தண்ணீர் இல்லாமல் மீன் வாழ மாட்டாது” என்பது போல வியாபாரிகளும் மக்களோடு உடன் இருந்து தங்கள் நிலையை பாதுகாத்து மக்களோடு இயைந்து வருகின்றனர்.

என்னதான் சொகுசானவர்கள் அதிகமாக இருப்பதாலும் சில மக்களின் கண்ணை கவரும் விதத்தில் இந்த துணிக்கடைகள், பழங்கள், பாத்திரங்கள், பாதணிகள் உட்பட்ட சில பொருள்களை வெறும் தரையிலும் தறப்பாள்களிலும் என்னும் போட்டு வெயில் மழை என்று எதையும் பொருட் படுத்தாது, தனது பிள்ளைகளின் கல்விக்காகவும் வீட்டு வறுமையைக் குறைப்பதற்காகவும் அவர்களால் வேறு வேலைகள் செய்ய முடியாத பட்சத்திலும் இதனை செய்து வருகின் றார்கள்.



கு.லோகிதா,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
ஊடக துறை.

மாரி காலம் என்றாலே வாழ்வை புதுப்பிக்கும் காலம் என்று சொல்வார்கள்.ஆனால், இவர்களுடைய வாழ்க்கையில் மழைக்காற்றில் பேருலக அழகுக்குள் மறைந்து காணப்படும் வியாபாரத்துறையில்பொய்யாகத்தான் அது போய்விட்டது. யாழ். வீதியோரத்தில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நிலையானது பெரும் சவால்களுக்கு மத்தியில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. எப்போ தமது வாழ்வில் ஒளி வீசும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கும் இவர்களுக்கு இந்த மாரி காலம் இருள் சூழ்ந்த காலமாகக் காணப்படுகிறது.

அன்றாடம் தங்களுடைய வியாபாரத்தின் நம்பி இருக்கும் இவர்கள் இந்த மாரி காலத்தால் பெரும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். மழை காலத்தின் ஆரம்பம் முதல் யாழ். வீதியோரத்தில் உள்ள பல வியாபாரிகள் இயல்பு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவதில்லை. சாலைகள் நீர்மூழ்கிய நிலையில் காணப்படுவதால், வாங்குபவர்கள் கணிசமாக குறைகின்றனர். இது குறிப்பாக உணவகம், பூக்கடை, ஜவுளிக்கடை போன்ற அவசர தேவைகளை முழுமையாக ஈடுகொள்ளும் கடைகளின் வருமானத்தை இழக்கின்றன.

மாரி காலங்களில், புறநகர் பகுதிகளிலும் நகர மையத்திலும் யாழ். வீதிகளில் தண்ணீர் தேங்குவதால், வியாபாரிகள் கடைகளை திறந்து வைத்தாலும், வாடிக்கையாளர்கள் செல்ல முடியாத நிலைமைதான். அதிக மழையால் பாதிக்கப்பட்ட சாலைகள் வியாபாரப் போக்குவரத்துக்கும் பெரும் தடையாக மாறுகின்றன.

மாரி காலங்களில் பல வியாபாரிகள் பண்டங்களை பாதுகாக்க முடியாமல் இழப்புகளை சந்திக்கின்றனர். குறிப்பாக, காய்கறிகள், பழங்கள் போன்ற சில்லறை விற்பனையாளர்கள் மழையின் காரணமாக தங்கள் பொருள்களை விரைவாக விற்க முடியாமல், சேதம் அடைகின்றன. இதன் விளைவாக, அவர்கள் பொருளாதார சிக்கல்களை சமாளிக்க வேண்டி வருகிறார்கள்.

சிறு அளவிலான வியாபாரிகள், குறிப்பாக பாதுக்காப்பு வசதிகள் இல்லாத கடைகளை நடத்துவோர், மழையால் கடைகள் நீர் ஊர்வத்தில் மூழ்குவதால் வேலையை நிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இந்த பிரச்சினை தொடரும் பட்சத்தில், பலர் தங்கள் தொழிலை நிறுத்த வேண்டியதாயும் கூட மாறுகின்றது.

மழைக்காலத்தில் நேரடி விற்பனை சிரமமானதாக மாறுவதால், சில வியாபாரிகள் மின்னணு வியாபாரத்தை திசை திருப்புகின்றனர். இது பிரச்சினைக்கு ஒரு மாற்று தீர்வாக இருக்கின்றது. இருப்பினும், இந்த மாற்றத்துக்காகத் தேவையான மின்னணு அறிவு மற்றும் பொருளாதார ஆதரவு அனைவருக்கும் கிடைப்பதில்லை.

மற்றும் அவர்களுக்கு ஏற்படும் முக்கியமான பிரச்சினைகளாக மாநகர சபையின் அழுத்தங்களும் உள்ளன. அதாவது இவர்கள் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துகின்ற வகையில் தங்களுடைய வியாபாரங்களை நடத்து

தொடர்ச்சி ▲

# மாரி காலமும் யாழ். வீதியோர வியாபாரிகளும்!

தொடர்ச்சி▼

வதாக எண்ணி அவர்களுடைய வியாபாரத்தை வேறு இடங்களில் செய்யுமாறு பணிக்கின்றனர்.

பொது மக்கள் கூடும் இடங்களில் தான் இவர்களது வியாபாரம் செழிக்கும் என்பதை அவர்கள் மறந்து போகின்றனர்.

இவ்வாறு இந்த வியாபாரிகளின் நிலையானது கேள்விகளுக்குள் உள்ளது.

யாழ் வியாபாரி ஒருவரிடம் இதை தொடர்பாக வினவியபோது போது, கார்த்திகேஷ் கணேஷ் என்ற நபர் சாவகச்சேரியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் ஆடை வியாபாரத்துக்காக இங்கே வருகை தந்துள்ளார். அதிகமான மக்கள் கௌரவத்தின் பெயரால் தங்களிடம் நாடுவது இல்லை எனவும் அவற்றி லும் தெரு ஓரங்களில் நின்று அவர்கள் வேண்டுவதைக் கௌரவக் குறைச்சல் என எண்ணி தங்களை திரும்பிப் பார்ப்பது இல்லை எனவும் கூறினார்.

தங்களுடைய கூச்சல் சத்தத்தையும் எம் இடங்களையும் எண்ணி சிலர் வருகின்றனர். அதனை நாம் கடவுளாகத்தான் எண்ணுகிறோம். ஏனென்றால் இன்று எங்களுக்கு வியாபாரம் நடக்குமோ இல்லையோ என எதிர்பார்த்திருந்த நாங்கள் இவர்கள் வந்து வேண்டுவதை நாம் பெரும் வரமாகத்தான் நினைக்கிறோம். அதிலும் மழை காலங்களில் மழையில் பொருள்களை விற்பனை செய்வது சிரமமாகவும் உள்ளதால் மழைக்காலங்களில் எங்கள் வியாபாரம் கேள்விக்குரியதான போகிறது.

ஏனைய காலங்களில் வியாபாரத்தைச் செய்வோம் என்றால் மாநகர சபை எங்களை விற்க இடம் அளிப்பது இல்லை. இருப்பினும் சவாலாகவே உள்ளது. எங்களுக்கு தீர்வினை பெற்றுத் தர உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இவ்வாறு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது வாழ்வை நடத்திவரும் இவர்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பது மிகவும் முக்கியமான தாகும்.

இதற்கு நகராட்சி நிர்வாகம், சாலைகள் மற்றும் நீர் வடிகால்களை சரியாக பராமரிக்க வேண்டும், சிறு வியாபாரிகளுக்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் தற்காலிக கடன் உதவிகளை வழங்க வேண்டும், வியாபார சேதங்களை காப்பாற்ற சுலபமான இன்சூரன்ஸ் திட்டங்களை அறிமுகம் செய்தல் வியாபாரிகளுக்கு மின்னணு வியாபாரத்துக்கான திறன்களைப் பகிர்ந்து கற்றுத்தர வேண்டும்.

மாரி காலங்கள் வியாபார உலகில் ஒரு தற்காலிக வீழ்ச்சியைக் கொண்டு வரினும், அவற்றைச் சமாளிக்க ஆற்றல் நிறைந்த தீர்வுகளை உருவாக்க வேண்டும். வியாபாரிகள் தங்கள் வியாபார உற்பத்திகளை மீண்டும் புதுப்பிக்க வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும் திரும்ப பெற வேண்டும்.

இத்தகைய அடிப்படையான மாற்றங்கள் மட்டுமே யாழ். வீதியோர வியாபாரிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வண்ணம் இருக்கும்.

இவ்வாறான சில முயற்சிகளை மேற்கொண்டு அவர்களின் வாழ்வையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கான நடவடிக்கைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.



# வலிகளும் வரிகளும் வரலாறான நூல் சிட்னியில் வெளியாகியது!

(நவீனன்)

தமிழினப் படுகொலையின் சாட்சியும், 2009 வன்னி போர்க்களத்தில் இறுதிவரை பணியாற்றிய மருத்துவர்களில் ஒருவருமான மருத்துவர் வரதராஜாவின் ‘தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்’ என்னும் நூல் சிட்னியில் வெளியிடப்பட்டது.

இந்த நூல் ஆஸ்திரேலியாவில் அடிலெய்ட், மெல்பேர்ண் நகர்களில் ஏற்கனவே வெளியாகியது.

இறுதிப் போரில் தாயக மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை பேரவலத்தின் போது மகத்தான சேவையாற்றிய மருத்துவரை மதிப்பளிக்கும் வண்ணம் சிட்னியில் புத்தக வெளியீடும் நேரடி சந்திப்பு கலந்துரையாடலும் நடைபெற்றது.

இந்நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பிளாக் டவுண் நகர நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

சர்வதேசம் எங்கும் ஈழத்தமிழர்களின் பலத்த ஆதரவுடன் வெளியிடப்பட்ட வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் வாழ்க்கை வரலாறு நூல் ஆங்கில மொழியில் ரஜீ பட்டீசன் எழுதிய “தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்” என்பது ஈழத் தமிழர்களின் துயரமான வரலாற்றையும், அவர்களுக்கு நிகழ்ந்த கொடூரங்களையும் ஆவணமாக்கும் ஒரு முக்கியமான நூலாகும்.





# உலக மலை தினத்தை கொண்டாடும் சூழல் நட்பு!

## டிசெம்பர் 11 உலக மலையக தினம்

(மஸ்கெலியா )

டிசெம்பர் 11 ஆம் திகதி உலக மலையக தினமாகும். இந்தக் கொண்டாட்டத்தின் ஆரம்பத்தை முன்னிட்டு சிறு குழந்தைகளின் ஏற்பாட்டில் சிறுவர் மலை தின கொண்டாட்டமும் மர நடுகை நிகழ்ச்சியும் நேற்று (10) காலை தியத்தலாவ ஹறி வந்தா பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றன.




பிரபாவா கிட்ஸ் கிளப் பிள்ளைகள் தலைமையில் ஹறிவா பள்ளி குழந்தைகளின் பங்களிப்புடன் இந்த சிறுவர் மலை தின விழா மற்றும் மரம் நடும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பூமியில் உயிர் வாழத் தேவையான நீர், காற்று, உணவு, எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதில் மலைகளின் பங்களிப்பு காரணமாக, மலைகளைப் பாதுகாப்பது, மக்களுக்குப் புரிய வைப்பது உள்ளிட்ட பல விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பு சர்வதேச மலை தினத்தை அறிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு நடைபெற்ற புவி உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் 11 ஆம் திகதி உலக மலையேறும் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் பல நாடுகளில் உள்ள சுற்றுச்சூழல் அமைப்புகள் மலை ஏறுதல், சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் சுற்றுலா போன்ற திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றன. டிசெம்பர் மாதம் முழுவதும் மலைப் பகுதிகளை மேம்படுத்துதல் இடம்பெற்று வருகிறது.

சர்வதேச மலை தினம் 2024 – “நிலையான எதிர்காலத்துக்கான மலைத் தீர்வுகள் – புதுமை, தழுவல் மற்றும் இளைஞர்கள்” என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்படுகிறது.

சர்வதேச மலைகள் தினம் முதன்முதலில் 2010 இல் இலங்கையில் கொண்டாடப்பட்டது. 5850 அடி உயரத்தில் ஹப்புத்தளை மலை உச்சியில் அமைந்துள்ள பிரபவ காடு கொண்டாட்ட தளத்தில் பிரபவ சுற்றாடல் அமைப்பு முதல் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. இன்றுவரை வருடாந்த பிரபவ காடு ஏறி கொண்டாட்டம் இடம்பெற்று வருகின்றது.

பிரபவ அமைப்பின் தலைவர் அசங்க பிரபாத் ரத்நாயக்க மற்றும் அழைப்பாளர் ரஞ்சித் குமார் கரமேகம் ஆகியோர் இந்த நாளை இலங்கைக்கு அறிமுகம் செய்த முன்னோடிகளாவர்.

பிரபவ சுற்றாடல் அமைப்பின் வழிகாட்டுதலின் பேரில், 2022 ஆம் ஆண்டில், பிரபவ சிறுவர் அமைப்பு தியத்தலாவ விரித்தகல காட்சி முனையில் முதல் சிறுவர் மலையேறும் தின கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்தது, இது உலகின் முதல் சிறுவர் மலையேறுதல் தினமாக அறிவிக்கப்பட்டது.

இவ்வருடம் நடைபெற்ற சிறுவர் தின கொண்டாட்டத்தின் போது பிரபவ சிறுவர் அமைப்பின் தலைவர் தம்சர தட்சரி ரத்நாயக்க வரவேற்று நோக்கங்களை விளக்கினார்.

அதனையடுத்து, பாடசாலையின் அதிபர் பிரமித் லியனகே, அதன் ஆசிரியர் ஊழியர்களுடன் இணைந்து சிறுவர்களுக்கு கும்புக் செடிகளை வழங்கி வைத்தார்.

மரநடுகையின் பின்னர் கருத்துரைத்த பிரபவ முதல்வர் அசங்க பிரபாத் ரத்நாயக்க, மலைகள் நாம் வாழ்வதற்குத் தேவையான நீர், காற்று, உணவு, எரிபொருள் உட்பட அனைத்து பொருள்களையும் வழங்குவதாகவும், அது சிறுமிகளின் பொறுப்பு எனவும் தெரிவித்தார். இத்தகைய மதிப்புள்ள மலைகளின் சுற்றுச்சூழலையும், மலைகளின் நீரையும் பாதுகாக்க, நீரூற்றுகளுக்கு அருகில் கும்பக் செடிகளை நட்டு இன்று சொல்லும் செய்தி அனைவருக்கும் முக்கியமானது.

சிறுவர் மலை தின கொண்டாட்டம் மற்றும் மர நடுகை நிகழ்ச்சியுடன் ஆரம்பித்து ஜனவரி 11 ஆம் திகதி வரை ஹப்புத்தளை, தியத்தலாவ, இடல்கஹின்ன உள்ளிட்ட மலையகங்களை மையப்படுத்தி ஒரு மாத காலத்துக்கு பிரபவ மலை தின கொண்டாட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

சுற்றாடல் அமைப்பின் தலைவர் அசங்க பிரபாத் ரத்நாயக்க, ஹப்புத்தளை பிரதேச செயலகத்தின் சுரங்கப் பாதைக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹர்ஷ குமாரி ரத்நாயக்க, ஹறி வியாண்டா பாடசாலையின் அதிபர் பிரமிதா லியனகே, பிரபாவ சிறுவர் விவகார இணைப்பாளர் சமிலா ரத்நாயக்க, பிரபாவ சிறுவர் விவகார இணைப்பாளர் தம்சரா தட்சறி, , பவன் தர்ஷிகா, அழைப்பாளர், செயலாளர் சஹன்யா சத்சாரி, அருமை பள்ளி குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டனர்.








# பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாது ஒழிக்கும் வேலைத் திட்டம்

(பழுவூரான்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாது ஒழிக்கும் 16 நாள் வேலைத் திட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை (10) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

அருவி பெண்கள் வலையமைப்பால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வின் முதல் நிகழ்வாக அதிதிகள் வரவேற்கப்பட்டு பிரதான நிகழ்வு காந்தி பூங்கா வளாகத்தில் இடம் பெற்றது.

பெண்களுக்கு எதிரான வன்முறையிலிருந்து பாதுகாத்தல் மற்றும் விழிப்புணர்வூட்டும் வகையில் இன்று முன்னெடுக்கப்பட்ட 16 நாள் வேலைத் திட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு அருவி பெண்கள் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி மயூரி ஜனன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் அதிதிகள் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து அதிதிகளின் உரை இடம் பெற்றது. அதன் பின்னர் “உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்” எனும் தலைப்பிலான சஞ்சிகை அருவி பெண்கள் வலையமைப்பால் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதன் முதல் பிரதி பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட அதிதிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட சவால்களுக்கான பரிந்துரைகள் அடங்கிய மகஜர் அருவி பெண்கள் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி மயூரி ஜனனியால் மாவட்ட அரச அதிபர் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் முகாமையாளர் ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டது.


மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து பெண்கள் மாத்திரம் இன்றைய தினத்தில் பயணிக்கக் கூடிய வகையில் அருவி பெண்கள் வலையமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவையை மாவட்ட அரச அதிபர் ஆரம்பித்து வைத்தார். பெண்களுக்கான ஒரு நாள் இலவச பஸ் சேவையானது இன்றைய தினம் மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனை வரை இடம் பெற்றது.

இதேவேளை பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணமான விழிப்புணர்வு ஊர்வலமொன்று காந்தி பூங்கா முன்பாக ஆரம்பிக்கப்பட்டு பிரதான பஸ்தரிப்பு நிலையத்தை அடைந்து அங்கிருந்து தாண்டவன்வெளியை சென்றடைந்தது.

இந்நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதேச செயலாளர்களான வீ.வாசுதேவன், சிவப்பிரியா வில்வரத்தினம், இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு டிப்போ பொது முகாமையாளர், அருவி பெண்கள் வலையமைப்பின் உத்தியோகத்தர்கள், பெண் கள் மற்றும் இளைஞர், யுவதிகள், சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.










# ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மணிப்பூரில் பேரணி

மணிப்பூரில் ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் 1958 நீக்கக் கோரியும், தீவிரவாதிகள் என்ற பெயரில் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு எதிராகவும் ஆயிரக்கணக்கானோர் தலைநகர் இம்பாலில் பேரணி நடத்தினர். இதில் பெண்கள், மாணவர்கள் பெரும் பாலன அளவில் கலந்து கொண்டனர்.

டிசம்பர் 10 சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு நடந்த இந்தப் பேரணியில் ஈடுபட்டவர்கள், மாநிலத்தில் மனித உரிமைகளை பாதுகாக்கவும், ஆயுதம் தாங்கிய போராளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் கோரிக்கை விடுத்தனர்.

இந்தப் பேரணி மேற்கு இம்பால் மாவட்டத்தின் தங்கமைபாண்ட் தாவு மைதானத்தில் இருந்து இம்பால் நகர சந்தை மற்றும் க்வைராம்பண்ட் கைதேல் வழியாக குமான் லம்பேக் வரை சென்றது.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஆயுதப்படை சிறப்பு சட்டத்தை நீக்கு, ஆயுதப்படை சிறப்பு சட்டத்தை ரத்து செய், சுயமரியாதை எங்களின் பிறப்புரிமை என்ற கோஷங்களை எழுப்பினர்.

இந்தப் பேரணியை அனைத்து மணிப்பூர் யுனைட்டெட் ஆர்கனைசேஷன் தலைமையில் 5 சிவில் அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தன.

பொய்ரே லேமாரோல் மேய்ரா பைபி அபுன்பா மணிப்பூர், அனைத்து மணிப்பூர் பெண்கள் தன்னார்வ அமைப்பு, COHR மனித உரிமைகள் அமைப்பு மற்றும் மணிப்பூர் மாணவர்கள் பேரவை போன்ற அமைப்புகள் பேரணியில் கலந்து கொண்டன.

பேரணியின் போது செய்தியாளர்களிடம் பேசிய AMUCO தலைவர் நந்தோ லுவாங், “மணிப்பூரின் ஐந்து மாவட்டங்களில் உள்ள ஆறு காவல் நிலைய எல்லை களில் அமல்படுத்தப்பட்டுள்ள ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்து எதிராக இந்தப் பேரணி நடந்தது” என்று தெரிவித்தார்.

மணிப்பூரில் கடந்த ஆண்டு மே மாதம் இம்பால் பள்ளத்தாக்கில் வசிக்கும் மைத்தேயி, பழங்குடியினர்களான குகி ஸோ மக்களுக்கும் இடையே ஏற்பட்ட இனக்கலவரம் ஏற்பட்டது. இதில் 250 இற்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# கடவுளே அஜித்தே என்ற கோஷம் என்னை கவலையடையச் செய்கிறது

## நடிகர் அஜித் அறிக்கை



கடவுளே அஜித்தே என்ற கோஷம் தன்னை கவலையடையச் செய்துள்ளது என்று நடிகர் அஜித் தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றினூடாக அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தனது பெயரைத் தவிர்த்து தன் பெயருடன் வேறு எந்த முன்னொட்டும் சேர்த்து அழைக்கப்படுவதில் தனக்கு துளியும் விருப்பமில்லை என அஜித் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனது பெயரில் மட்டுமே நான் அழைக்கப்பட வேண்டும் என விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பொது இடங்களிலும், மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் இந்த செயலை நிறுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அஜித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





# சிரிய இராணுவத் தளங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல்

ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து அந்நாட்டு இராணுவம் விட்டுச் சென்ற ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கடந்த இரு நாள்களில் நூற்றுக்கணக்கான சிரியாவின் கடற்படை மற்றும் பிற இராணுவ சொத்துக்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேலிய ஏவுகணைக் கப்பல்கள் அசாத்தின் படைகளுக்குச் சொந்தமான கடற்படைக் கப்பல்களை அழித்தன, அவை 120 மைல்கள் வரை தாக்கும் திறன் கொண்ட ஏவுகணைகளை கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில், லதாகியா மற்றும் எல் பெய்டா விரிகுடாவின் துறைமுகப் பகுதியில் இந்த தாக்குதல்கள் நடத்தியதாக கூறியது.

ஆயுதங்கள் கிளர்ச்சியாளர்களின் கைகளில் கிடைத்தால், அவற்றை இஸ்ரேலுக்கு எதிராக பயன்படுத்த முடியும் என்ற காரணத்தினால், அவை கிளர்ச்சியாளர்களின் கைகளில் கிடைப்பதை தடுக்கும் நோக்கில் இந்த தாக்குதல் அரங்கேற்றப்பட்டதாகவும் கூறியுள்ளது.

லதாகியா துறைமுகத்தில் குண்டு வெடிப்புகளைக் காட்டும் வீடியோக்களை பிபிசி சரிபார்த்துள்ளது, படக்காட்சிகள் கப்பல்கள் மற்றும் துறைமுகத்தின் சில பகுதிகளுக்கு விரிவான சேதத்தை ஏற்படுத்துவதை வெளிக்காட்டுகின்றன.

சிரியா மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்றுகளுக்கு இடையே உள்ள இராணுவமற்ற பாதுகாப்பு மண்டலத்திற்கு தரைப்படைகளை நகர்த்தும் போது, சிரியா முழுவதும் உள்ள இலக்குகள் மீது அதன் போர் விமானங்கள் 350 இற்கும் மேற்பட்ட வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாகவும் இஸ்ரேலிய பாதுகாப்பு படை கூறியுள்ளது.

முன்னதாக, சிரிய அரசாங்கம் கிளர்ச்சியாளர்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை தூக்கியெறியப்பட்டதிலிருந்து இஸ்ரேலிய பாதுகாப்பு படை 310 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை நடத்தியுள்ளதாக பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு (SOHR) கூறியது.

இதனிடையே, இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் ஒரு அறிக்கையில், “இஸ்ரேல் அரசை அச்சுறுத்தும் மூலோபாய திறன்களை அழிப்பதை” இஸ்ரேலிய படையினரின் நோக்கம். சிரிய கடற்படையை அழிக்கும் நடவடிக்கை “பெரும் வெற்றி” பெற்றதாகவும் தெரிவித்தார்.

சிரிய தலைநகர் டமாஸ்கஸ், ஹோம்ஸ், டார்டஸ் மற்றும் பால்மைராவில் உள்ள விமானநிலையங்கள், இராணுவ வாகனங்கள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் ஆயுத தயாரிப்பு தளங்கள் உட்பட – பரந்த அளவிலான இலக்குகள் தாக்கப்பட்டதாகவும் இஸ்ரேலிபய பாதுகாப்பு படை குறிப்பிட்டுள்ளது.

தாக்குதல்கள் ஆயுதக் கிடங்குகள், வெடிமருந்துக் கிடங்குகள் மற்றும் கடல் ஏவுகணைகளையும் குறிவைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.





# ஜப்பானில் குழந்தை பிறப்பில் வீழ்ச்சி: வாரத்தில் 4 நாள்கள் மட்டுமே வேலை

ஜப்பானில் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து கொண்டே வந்ததை அடுத்து, அந்நாடு சில அதிரடி சலுகைகளை வழங்கி உள்ளதாக கூறப்படுகிறது.

ஜப்பான் நாட்டில் கடந்த ஆண்டு வரலாறு காணாத அளவில் குழந்தை பிறப்பு விகிதம் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும், 2022 ஆம் ஆண்டு பதிவானதை விடவும் கடந்த ஆண்டு பிறப்பு விகிதம் 5 சதவீதத்திற்கு மேல் குறைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதனை அடுத்து, குழந்தை பிறப்பு விகிதத்தை அதிகரிக்க வாரத்தில் நான்கு நாள்கள் மட்டுமே வேலை என்ற நடைமுறையை ஜப்பான் அரசு கொண்டுவந்துள்ளது.

அரசு அலுவலகங்களில் முதல் கட்டமாக இந்த சலுகை கொண்டு வரப்பட உள்ளதாகவும், இதனை அடுத்து படிப்படியாக தனியார் நிறுவனங்களுக்கும் இந்த சலுகை கொண்டு வரப்படும் என்றும் கூறப்படுகிறது.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகவும், இதனால் ஊழியர்கள் குடும்பத்துடன் அதிக நேரம் செலவிடுவார்கள் என்பதால் உடல் மற்றும் மன அளவில் ஆரோக்கியமாக இருப்பார்கள் என்றும், இந்த சலுகை காரணமாக அடுத்த ஆண்டு குழந்தை பிறப்பு விகிதம் அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது

ஜப்பானில் கடந்த சில ஆண்டுகளாக மக்கள் திருமண உறவில் மற்றும் குழந்தை பெறுவதில் நாட்டம் இல்லாதவர்களாக மாறி வருகின்றனர் என்று ஆய்வு அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

பக்கங்கள் 03

கனடா முரசு

புதன்கிழமை 11/12/2024

## நாயைக் கொலை செய்தவருக்கு மூன்று மாதங்கள் வீட்டுக் காவல்

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் நாய் ஒன்றை கொலை செய்தவருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

40 வயதான ஒன்றாரியோ பிரஜை ஒருவருக்கு 02▶





# லிபரல் கட்சி அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை தோல்வி

**கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்ட மூன்றாவது நம்பிக்கை இல்லாப் பிரேரணையும் தோற்கடிக்கப்பட்டுள்ளது.**

**நேற்றையதினம் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.**

**கான்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியே பொலியேவ் இந்த நம்பிக்கையில் லாப் பிரேரணையை கொண்டு வந்தார்.**

சிறுபான்மை அரசாங்கமான லிபரல் அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து கவிழ்க்கும் நோக்கில் அவர் மூன்றாவது தடவையாக இவ்வாறு நம்பிக்கை இல்லாப் பிரேரணையை கொண்டு வந்திருந்தார்.

எவ்வாறெனினும், இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையும் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது என்.டி.பி கட்சியின் தலைவர் ஜக்மீட்சிங் அவையில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் என்.டி.பி மற்றும் பசுமைக் கட்சி என்பன லிபரல் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தன.




# சீரற்ற கால நிலை காரணமாக பாடசாலை பஸ் சேவை ரத்து

ஒன்றாரியோ மாகாணத்தின் சில இடங்களில் நேற்று பாடசாலை பஸ் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக இவ்வாறு பஸ் போக்குவரத்து சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தின் மத்திய பகுதியில் இவ்வாறு பஸ் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் சீரற்ற காலநிலை தொடர்பில் முன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடும் பனிப்பொழிவும் ஏற்படுவதுடன் மழை பெய்யும் என எதிர்வு கூறியுள்ளது. அநேகமான பகுதிகளில் இவ்வாறு மழை பெய்யும் என தெரிவிக்கப்படுகிறது.

சில இடங்களில் இரண்டு முதல் நான்கு சென்டிமீட்டர் வரையில் பனிப்பொழிவு நிலவும் என தெரிவிக்கப்படுகிறது.



# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ரொறன்ரோவில் பெண் உயிரிழப்பு

கனடாவின் ரொறன்ரோ கிழக்கு பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த துப்பாக்கி சூட்டில் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயம் அடைந்த பெண்ணை மீட்டு முதலுதவி செய்யப்பட்ட போதிலும் உயிர் காப்பு முயற்சிகள் தோல்வி அடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த துப்பாக்கி சூட்டுக்கு பயன்படுத்திய துப்பாக்கியும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தினால் பொது மக்களின் பாதுகாப்பிற்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது என பொலிஸார் பொலிஸார் அறிவித்துள்ளனர்.












## நாயைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 23 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.


நாயின் கழுத்தை நெரித்து இந்த நபர் கொலை செய்துள்ளார். ஆரம்பத்தில் நாயை காணவில்லை என கூறியிருந்தார், பின்னர் தாம் நாயை கொன்றதாக விசாரணைகளில் ஒப்புக்கொண்டுள்ளார்.

மேற்படி நாய் பலரை கடித்ததாகவும் நோய்வாய்ப்பட்டிருந்ததாகவும் அவர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த நாயை கருணை கொலை செய்வதற்கு செலுத்த போதியளவு பணம் இருக்கவில்லை எனவும், நாய்கள் காப்பகங்களும் நாயை பொறுப்பேற்க மறுத்தனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனால் தாம் நாயை கொன்றதாக அவர் தெரிவித்துள்ளார். குற்றச் செயலை ஒப்புக்கொண்ட காரணத்தினால் அந்த நபருக்கு நீதிமன்றம் குறைந்தளவு தண்டனை விதித்துள்ளது. இதன்படி, அவரை மூன்று மாதங்கள் வீட்டுக் காவலில் வைக்க உத்தரவிட்டுள்ளதுடன், வாழ் நாளில் செல்லப் பிராணிகள் வளர்ப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.





# ஒன்றாரியோ மாகாணத்தில் இருமல் நோயாளிகள் அதிகரிப்பு

கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்தில் தொடர் இருமல் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.

கடந்த 17 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நோயாளர் எண்ணிக்கை பதிவாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இவ்வாறு கூடுதல் எண்ணிக்கையில் தொடர் இருமல் நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

ஒன்றாரியோ பொது சுகாதார அலுவலகம் இது குறித்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

இந்தத் தொடர் இருமல் நோய் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தக் கூடியது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நோய் அறிகுறிகளை முன் கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதன் மூலம் பாதிப்புகளை வரையறுத்துக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.





# ஒன்றாரியோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் பலி

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் லனக் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மேலும் இந்த விபத்தில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஒன்றாரியோ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பெண் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில், மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்தப் பெண் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார்.

மேலும் இரண்டு பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.